# அவர் சகலத்தையும் புதிதாக்குகிறார்



வெளி 21:5

# பொருளடக்கம்

## தேவனின் இரட்சிப்பின் திட்டம்


நாள் 1 : நாம் மீட்கப்பட்டோம் 01

நாள் 2 : நாம் ஒப்புரவாதமாக்கப்டோம் 01

நாள் 3 : நாம் மறுஜென்மமாக்கப்பட்டோம் 02

நாள் 4 : நாம் விடுவிக்கப்பட்டோம் 02

நாள் 5 : நாம் புதுப்பிக்கப்பட்டு இருக்கிறோம் 03

நாள் 6 : நாம் பலன் பெற்றுயிருக்கிறோம் 03

நாள் 7 : நாம் உயிர்த்தெழுந்திருக்கிறோம் 04


## விசுவாசத்தின் பிரிட்சை


நாள் 8 : உண்மையான விசுவாசம் பரிட்சையிலும் சோதனையிலும் களிக்கூறும் 05

நாள் 9 : உண்மையான விசுவாசம் தேவனுடைய வார்த்தைக்கு மறுவுத்தரவு கொடுக்கும். 05

நாள் 10 : உண்மையான விசுவாசம் பாரபட்சம் அற்றது 06

நாள் 11 : உண்மையான விசுவாசம் இரக்கத்தின் கிரியைகளை காண்பிக்கும் 06

நாள் 12 : உண்மையான விசுவாசம் சத்தியத்தை அன்பிலே பேசும் 07

நாள் 13 : உண்மையான விசுவாசம் தேவனுக்கு கீழ்ப்படியும் 07

நாள் 14 : உண்மையான விசுவாசம் தேவனை நோக்கி ஜெபிக்கும் 08


## தேசத்தின் மாற்றம்


நாள் 15 : நம்முடைய முதல் அழைப்பு அனைத்து மனிதர்களுக்கும் ஜெபிக்க வேண்டும் 09

நாள் 16 : ஜெபத்தின் மூலம் ஒரு தேசம் மாற்றமடையும் 09

நாள் 17 : தேவன் தன்னுடைய ஜனங்களை உயர்ந்த இடங்களிலே நிலைத்து வைத்திருக்கிறார் 10

நாள் 18 : மாற்றம் உள்ளேயிருந்து தொடங்குகிறது 10

நாள் 19 : இறுதி காலம் பரிந்துபேசுதல் 11

நாள் 20 : பரிந்துபேசுகிற ஊழியத்தில் தான் பரலோகமும் பூமியும் ஒன்றுகூடுகிறது 11

நாள் 21 : உங்களுடைய ஜெபம் தேசத்திற்கு தேவனுடைய திட்டத்தைக் கொண்டு வரும் 12

# எப்படி உபவாசிப்பது

அவர் சகலத்தையும் புதிதாக்குகிறார்

ஜெபிக்கும் பொழுது ஒற்றுமையாகவும், சமாதானத்தோடும் இருக்க, பின் வரும் காரியங்களை கவனியுங்கள்:

- தின தியான கருத்துக்களை வாசித்தப் பின்பு வேத பகுதியை தியானிக்கவும்.
- நேரம் எடுத்து தேவனை தேடவும், இருதயத்தில் அமைதியாய் இருந்து கர்த்தருடைய குரலை கேட்கவும், வேத வார்த்தையை கொண்டும் கொடுக்கப்பட்ட காரியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.
- அன்றாட வேலை, படிப்பு காரியங்கள் மத்தியிலும் ஜெப தியானத்துடன் இருங்கள். அந்நிய பாஷையிலே அதிகமாக ஜெபியுங்கள்.
- அன்றாட காரியங்களைக் குறித்துக் கொள்ளுங்கள்.
- சோர்வுக்குறிய நடவடிக்கைகளை விட்டு விடுங்கள். உபவாசத்திலிருந்து உங்களை திசை திருப்பும் மற்ற காரியங்களை (தொலைக்காட்சி, கம்ப்யூட்டர் விளையாட்டுக்கள்) தவிர்த்து விடுங்கள்.

உங்களுக்கு உபவாசம் எடுக்க சுதந்திரம் உண்டு, ஆனாலும் பரிசுத்த ஆவியானவர் வழி நடத்துவார்.

### முழுமையான உபவாசம்

உணவின்றி 24 மணி நேரம் இருக்கவும். தண்ணீர் மட்டும் அருந்தலாம். 21 நாட்களுக்கு மேல் உபவாசிக்க விருப்பம் இருந்தால், உபவாசத்திற்கு முன் மருத்துவரின் ஆலோசனையை அனுகவும

### ஒரு நேர உணவு உபவாசம்

தினமும் ஒரு நேர உணவை தியாகம் செய்யவும். (மதிய அல்லது இரவு உணவு) மறு உணவு நேரம் வரை உபவாசம் நீடிக்க வேண்டும்.

### பாதிநேர உபவாசம்

பாதி நேரம் உணவின்றி இருக்கவும். தண்ணீர் மட்டும் அருந்தவும். உபவாசம் மொத்தம் 12 மணி நேரம். காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை. உங்கள் உபவாசத்தை சிற்றுண்டியுடன் முடித்துக்கொள்ளுங்கள்.

### தானியேல் உபவாசம்

இறைச்சி மற்றும் விருப்பமான பலகாரங்களிலிருந்து உபவாசம். சிறிய அளவில் மட்டும் காய்கறிகள், பழங்கள் மற்றும் பழச்சாறு பானங்களும் எடுத்துக்கொள்ளுங்கள்.இப்படி நீங்கள் 10 நாட்கள் முறையாக செயல்படலாம்.

## நாள் 1 நாம் மீட்கப்பட்டோம்

(தீத்து 2:14)

இயேசு நம்முடைய வாழ்வில் வரவில்லையென்றால், நாம் எப்படி இருந்திருப்போம் என்பதை தேவன் மட்டுமே அறிந்திருக்கிறார். நம்மை மீட்க இயேசு பாவத்தின் சம்பளத்தின் கிரயத்தைக் கொடுத்தார். இன்று நாம் பாவத்தின் பிடியில் இருந்து வீடுதலை செய்யப்படுகிறோம், அவர் நம்முடைய வாழ்வில் ஒரு புதிய அர்த்தத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார். நாம் அவருடைய சொந்த சிறப்பு மக்கள் மற்றும் அவருடைய வேலையைச் நிறைவேற்ற அவர் நமக்குள் ஒரு பக்தியை வைத்திருக்கிறார்.

### ஜெப குறிப்புகள்:

1. எங்களை மீட்டுதற்காக தேவனுக்கு நன்றி
2. மீட்பின் செய்தி எதிரொலிக்க ஜெபிக்கவும்.
3. காணாமல் போனவர்கள் இரட்சிக்கப்படவும் மீட்கவும் ஜெபிக்கவும்.

## நாள் 2 நாம் ஒப்புரவாதமாக்கப்டோம்

(2 கொரிந்தியர் 5:18)

தேவனுடன் உள்ள நம்முடைய உறவு பகைமையிலிருந்து நட்புக்கு மாற்றப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பு கிரியையின் காரணமாக நம்மை ஏற்றுக்கொள்கிறார். நாம் ஒப்புரவாத்தை அனுபவித்ததால். இந்த உலக பொருள் ஆசையில் இன்னமும் காணாமல் மூழ்கித் தவிக்கும் மற்றவர்களுக்கும் உதவ நமக்கு உரிமை உண்டு.

### ஜெப குறிப்புகள்:

1. எங்களை ஒப்புரவாதம் செய்வதற்காக தேவனுக்கு நன்றி.
2. அவருடன் ஒப்புரவாதத்தில் நிலைத்திருக்க அவருடைய பலத்தையும் உண்மைத்துவத்தையும் கேளுங்கள்.
3. காணமல் போனவர்கள் இயேசுவிடம் வருகையில், அவர்களுடைய வாழ்க்கையில் புதிய அர்த்தத்தை கண்டுபிடிக்க ஜெபிக்கவும்.

## நாள் 3 நாம் மறுஜென்மமாக்கப்பட்டோம்

(தீத்து 3:5)

நம்முடைய வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் மாற்றத்தை தொடங்கி மற்றும் முடித்து வைக்கிறார் ஆகையால் தேவனுக்கும் மற்றும் அவருடைய படைப்புக்கும் நேராக நம்முடைய மனப்பக்குவம் மாறுகிறது. இவைகள் எல்லாம் இயேசுவினால் தான் நடக்கிறது, அவருடைய இரக்கத்தினால் நமக்காக அவருடைய ஜீவனைக் கொடுத்தார்.

### ஜெப குறிப்புகள்:

1. மறுஜென்ம கிரியைக்காக தேவனுக்கு நன்றி.
2. தொடர்ச்சியாக பரிசுத்த ஆவியானவருக்கு சரணடைய ஜெபிக்கவும்.
3. நற்கிரியைகளை செய்ய பெலப்படுத்தப்படுங்கள்.

## நாள் 4 நாம் விடுவிக்கப்பட்டோம்

(எபிரேயர் 2:14-15)

பயம் வருகிற வேளையில், நம்மை எல்லா பக்கத்திலும் ஒரு சுமையைப் போல் நெருக்கி துன்புறுத்துதலையும் மற்றும் நம்பிக்கையற்ற நிலைமையை உருவாக்கிறது. ஆனபோதிலும் நாம் தொடர்ச்சியாக பயத்தில் இருக்க அவசியமில்லை ஏனென்றால் இயேசு அப்படிப்பட்ட பயத்திலிருத்து நம்மை விடுவித்து இருக்கிறார்.

### ஜெப குறிப்புகள்:

1. நாம் பயத்திலிருந்து விடுவிக்கப்பட்டு இருந்ததற்காக தேவனுக்கு நன்றி.
2. எப்பொழுதும் அறிக்கை செய்து பயத்திலிருந்தும் மற்றும் சந்தேகத்திலிருந்தும் விடுதலையை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்.
3. தொடர்ச்சியான பயத்தில் கட்டப்பட்டவர்களுக்கு உதவி செய்ய தைரியத்திற்காக ஜெபிக்கவும்.

அவர் சகலத்தையும் புதிதாக்குகிறார்

## நாள் 5 — நாம் புதுப்பிக்கப்பட்டு இருக்கிறோம்

(2கொரிந்தியர் 4:16)

நம் எல்லோருக்கும் நல்ல அல்லது கெட்ட ஞாபகங்கள் உண்டு. சிலரைக் கெட்ட ஞாபங்கள் அவர்களை அனுதினமும் தொடர்கிறது. ஆகையால் அவர்களுக்கு சந்தோஷமும் சமாதானமும் இல்லை. சிலரோ தாங்கள் வயதாகிறதை ஏற்றுக்கொள்வதற்கு கஷ்டப்படுகிறார்கள், ஆனாபோதிலும் நாம் வயதாகுகிறதை நாம் நிறுத்த முடியாது ஆனாலும் நம்முடைய உள்ளான மனிதனுக்குள்ளாக அனுதினமும் தேவன் அதிசயமான காரியங்களை செய்து புதுப்பிக்கிறார். நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய வேலையை நாம் கவனம் செலுத்துகிற வேளையில் நமக்குள்ளாகவுள்ள பெரிதான அழகை நாம் பார்க்கலாம்.

### ஜெப குறிப்புகள்:

1. புதுபித்தலுக்காக தேவனுக்கு நன்றி.
2. உள்ளான வளர்ச்சியின் மேல் நாம் கவனம் செலுத்த தேவன் உதவி செய்ய ஜெபிக்கவும்.
3. நம்முடைய உள்ளான புதுபித்தல் நம்முடைய குணங்கள் மனப்பக்குவத்தின் மூலம் பிரதிபலிக்க வேண்டும்.

## நாள் 6 — நாம் பலன் பெற்றுயிருக்கிறோம்

(கொலொசெயர் 3:24)

ஒரு பலன் உண்டு, அது நித்தியத்திற்குரியது, பூமியில் உயிரோடு இருக்கிற நாட்களிலே இயேசு கிறிஸ்துவுக்கு சேவை செய்தவர்களுக்கு ஒரு சுதந்தரமாக கொடுக்கப்படுகிறது. ஆகையால், அழிந்துப் போகின்ற ஆஸ்திகளை சேகரிக்க கவனம் செலுத்த வேண்டாம், ஆனால் அந்த பெரிதான பலனை அடைய வேலை செய்வோமாக.

### ஜெப குறிப்புகள்:

1. பலனுக்காக தேவனுக்கு நன்றி.
2. பலனைப் பெற முழுமையான உறுதியை பெற்றுக்கொள்ள தேவனுடைய பெலத்தை தேடுவோமாக.
3. நம்முடைய வாழ்க்கையின் இறுதி பந்தயம் வரை உண்மையாக நிலைத்திருப்போமாக.

## நாள் 7 — நாம் உயிர்த்தெழுந்திருக்கிறோம்

(பிலிப்பியர் 3:10)

இயேசு உயிர்த்தெழுதுதலில் நம்முடைய விசுவாசம் அஸ்திபாரம் போடப்பட்டு தொடங்குகிறது. இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பின அதே வல்லமை விசுவாசிக்கிறவர்களுக்கு வெளிப்படுத்தப்படுகிறது. அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை அனுபவிக்க முதலாவது நாம் அவருடைய பாடுகளையும் மரணத்தையும் அனுபவிக்க அவசியமாக இருக்கிறது. நாம் ஒன்றைப் பெற்றுக்கொண்டு மற்றொன்றை வேண்டாம் என்று சொல்ல முடியாது.

### ஜெப குறிப்புகள்:

1. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்காக தேவனுக்கு நன்றி.
2. பரிசுத்த ஆவியானவரின் உயிர்த்தெழுதலின் வல்லமையை நாம் அனுபவிக்க ஜெபிக்கவும்.
3. இயேசுவின் உயிர்த்தெழுதலின் செய்தியை நாம் பயமில்லாமல் பிரசங்கிக்க ஜெபிக்கவும்.

அவர் சகலத்தையும் புதிதாக்குகிறார்

## நாள் 8

# உண்மையான விசுவாசம் பரிட்சையிலும் சோதனையிலும் களிக்கூறும்

(யாக்கோபு 1:2-18)

நம்முடைய ஆசீர்வாதங்களுக்கும் ஞானத்திற்கும் சந்தோஷத்திற்கும் தேவனே மூலக்காரணராக இருக்கிறார். நாம் சோதிக்கப்படும் போது, விடாமுயற்சியில் சந்தோஷமாய் இருக்கவும் மற்றும் ஏன் அதை அவர் அனுமதிக்கிறார் என்று அறிகிற ஞானத்தைக் கொடுக்கிற தேவன் மேல் கவனம் செலுத்துவோமாக. நாம் உறுதியான மற்றும் முதிர்ச்சியான ஊழியக்காரணராக ஆனபிறகு நாம் ஆசீர்வதிக்கப்படுவோம் மற்றும் தேவன் அவருடைய வாக்குத்தத்தங்களில் உண்மையாக இருக்கிறார் என்று அறிவோம்.

### ஜெப குறிப்புகள்:

1. தேவனை இன்னும் நன்கு அறிய வெளிப்பாட்டுக்காகவும் ஞானத்திற்காகவும் ஜெபிக்கவும். .
2. ஆராதனை, அவருடைய வார்த்தை மற்றும் மற்றவர்களோடு உள்ள ஐக்கியத்தின் மூலமாக அவரோடு உள்ள நெருங்கிய ஐக்கியத்தை பெருகச் செய்ய தேவனைக் கேளுங்கள்.
3. நீங்கள் செழிப்பாக இருக்க தெய்வீக வாஞ்சையும் தைரியத்தையும் தேவனிடம் கேளுங்கள்.

## நாள் 9

# உண்மையான விசுவாசம் தேவனுடைய வார்த்தைக்கு மறுவுத்தரவு கொடுக்கும்

(யாக்கோபு 1:19-27)

தேவனுடைய வார்த்தை நம்மை உணர்த்தும் போது நாம் காதை பொத்திக்கொண்டு, கோபப்பட்டு மற்றும் சுயநீதியாக இருந்தோம் என்றால் தேவனுடைய வார்த்தையை பயனற்றதாக நாம் மாற்றிவிடுவோம். அல்லது நாம் தாழ்மையோடு மற்றும் உற்சாகத்தோடு நாட்டப்பட்ட வார்த்தையை வரவேற்று, கீழ்ப்படிந்து நம்முடைய சிந்தனையை புதுப்பித்து நம்முடைய வாழ்க்கை விதத்தை முன்னேற்றப் பாதையில் போகும்போது நாம் ஆசீர்வதிக்கப்படுவோம்.

### ஜெப குறிப்புகள்:

1. தேவனுடைய வார்த்தையை படிக்கவும் தியானம் செய்யவும் மனப்பாடம் பண்ணவும் கட்டொழுங்கை உருவாக்க தேவனுடைய உதவியை கேட்போம்.
2. அவருடைய வார்த்தையை நேசிக்கவும் கீழ்ப்படியவும் கர்த்தருடைய உதவியை கேட்போம்.
3. நம்முடைய குடும்பத்திற்கும் நண்பர்களுக்கும் தேசத்திற்கும் அவருடைய வார்த்தையை பேச நம்மை பயத்திலிருந்து விடுவிக்க கர்த்தரை கேட்போம்.



## நாள் 10

# உண்மையான விசுவாசம் பாரபட்சம் அற்றது

(யாக்கோபு 2:1-13)

ஒவ்வொரு ஆத்துமாவும் தேவனுடைய சாயலிலே உருவாக்கப்பட்டுயிருக்கிறது என்றும் அவருடைய பார்வையில் விலையேரப் பெற்றது என்றும் பார்க்கும்போது அவர்களை சந்திக்க எதுவும் தடைசெய்யக்கூடாது. நம்மை ஒருவருக்கொருவர் மேல் அவருடைய தெய்வீக அன்பால் நிரப்ப தேவன் வல்லமையுள்ளவராக இருக்கிறார் அது நம்முடைய எதிரிகளையும் நேசிக்க வைக்கும்.

### ஜெப குறிப்புகள்:

1. அங்கத்தினர்கள் அன்பிலும் ஒற்றுமையிலும் இருக்க ஜெபிக்கவும்.
2. அங்கத்தினர்கள் சபையின் தரிசனத்தை ஏற்றுக்கொண்டு மற்றும் ஜெபத்திலும் கொடுப்பதிலும் தலைமைத்துவத்தோடு நிற்க ஜெபிக்கவும்.
3. அங்கத்தினர்கள் ஆத்துமாக்களை வெல்ல கனிக்கொடுப்பதற்கு தைரியத்தைப் பெற்று மற்றும் பலவீனர்களுக்கு உதவி செய்ய ஜெபிக்கவும்.

## நாள் 11

# உண்மையான விசுவாசம் இரக்கத்தின் கிரியைகளை காண்பிக்கும்

(யாக்கோபு 2:14-26)

உண்மையான விசுவாசம் செயலற்றதாகவோ அல்லது காணக்கூடததாகவோ இல்லை. ஆனால் அது செயல் உள்ளது. ஒருவனுக்குள்ளாக செயலுள்ள விசுவாசம் இருந்தால் அவன் நேர்மறையான மாற்றங்களை சூழ்நிலைக்குள் கொண்டு வந்து அவனோடு தொடர்பில் உள்ள ஜனங்களை வசப்படுத்துவான்.

### ஜெப குறிப்புகள்:

1. உடைந்து போனவர்களையும், தேவையுள்ளவர்களையும், மற்றும் ஏழைகளுக்கும் கிறிஸ்துவின் சரீரம் சேவை செய்ய ஊழியக்காரரின் இருதயத்தை பெற்றுக்கொள்ள ஜெபிக்கவும்.
2. பரிசுத்த ஆவியானவர் பலத்தக் கட்டுக்களை உடைத்து மற்றும் உடைந்த இருதயங்களை சுகப்படுத்த ஜெபிக்கவும்.

*அவர் சகலத்தையும் புதிதாக்குகிறார்*

## நாள் 12

## உண்மையான விசுவாசம் சத்தியத்தை அன்பிலே பேசும்

(யாக்கோபு 3)

பேசப்பட்ட வார்த்தைகள் நம்முடைய சிந்தனையின் பலன். எது நம்முடைய சிந்தனையை கட்டுப்படுத்துகிறோதோ அதுவே நம்முடைய செய்கையும் மற்றும் வாழ்க்கையின் இலக்கையும் கட்டுப்படுத்துகிறது. தேவனுக்கு ஸ்தோத்திரம் அவர் நம் வாயின் வல்லமையை அறிந்து இருக்கிறார், அவர் நம்மை பரிசுத்த ஆவினால் நிரப்பி தேவனுடைய வல்லமையிலும் சித்தத்திலும் அந்நிய பாஷையில் ஜெபிக்க வைக்கிறார். நாம் நிறுத்தக்கூடாது ஆனால் தொடர்ச்சியாக பரிசுத்த ஆவியில் ஜெபித்து, துதித்து மற்றும் ஆராதித்து தேவனுடைய சித்தத்தில் நடக்க வேண்டும்.

### ஜெப குறிப்புகள்:

1. வாலிபனை அவனுடைய பெற்றோர்களோடு ஒப்புரவாதம் செய்ய வைத்து மன்னிப்பு அற்றவகைளை சந்திக்க அவர்களுக்கு உதவி செய்யவும்.
2. கர்த்தரே அவர்களின் சிந்தனைகளையும் இருதயங்களையும் பாதுகாத்து அவர்களை உலக கண்ணியில் இருந்து தப்புவிப்பார்.
3. மாம்சத்தையும், உலகத்தையும் பிசாசை மேற்கொள்ள தேவன் வாலிபர்களுக்கு ஆலோசகர்களை எழுப்புவராக.

## நாள் 13

## உண்மையான விசுவாசம் தேவனுக்கு கீழ்ப்படியும்

(யாக்கோபு 4)

நாம் தேவனோடு நடக்கிறதை தடைச் செய்ய முயற்சியிடுகிற சுய நலமான மாம்ச ஆசைகளுக்கு முதலாவது நாம் மரிக்க ஆயத்தமாகயிருந்தோம் என்றால் தேவனுடைய அதிகாரம் நமக்கு கொடுக்கப்படுகிறது. இரண்டாவதாக, அவர் மேல் கவனத்தை வைக்காமல் நம்முடைய கவனத்தை திருடுகிற எல்லா உலக விக்கிரங்களுக்கு மேலாக நம்முடைய தேவனுக்கு அடங்கி உயர்த்தும்போது. கடைசியாக, நாம் தொடர்ச்சியாக தாழ்மையில் நடக்கும்போது தேவனுடைய கிருபை நமக்கு போதுமானதாக இருக்கும் மற்றும் அவர் தொடர்ச்சியாக நம்முடைய பெலவீனங்களை நீக்கி அவருக்கு பயனுள்ளவர்களாக சேவை செய்ய வல்லமையையும் அதிகாரத்தையும் கொடுப்பார்.

### ஜெப குறிப்புகள்:

1. அப்போஸ்தலர் மற்றும் தீர்க்கதரிசி குரல்கள் எதிரிகளை எதிர்த்து நிற்க ஜெபிக்கவும்.
2. நம்முடைய ஆவிக்குரிய வரங்களை கூர்மையாக்கவும், சுவிசேஷத்திற்கு நாம் வல்லமையுள்ள பாத்திரங்களாக உருவாக்க தேவனிடம் கேளுங்கள்.
3. தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்துவதற்கும் பரிசுத்த ஆவியின் வல்லமையால் வழிநடத்தப்படுவதற்கும் எப்படி பயனுள்ள ஜெபவீரர்களாக இருக்க வேண்டுமென்று எங்களுக்கு கற்றுக்கொடுக்கவும்.

## நாள் 14

## உண்மையான விசுவாசம் தேவனை நோக்கி ஜெபிக்கும்

(யாக்கோபு 5:13-20)

ஒரு நீதிமான் தேவனை சார்ந்து எல்லா சூழ்நிலைகளிலும் அவரோடு சார்ந்து நடப்பான், ஆகையால்தான், அவனுடைய ஜெபம் வல்லமையுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும். பிரச்சனை நேரத்தில் அவன் ஜெபிப்பான். சந்தோஷ நேரத்தில் அவன் தேவனை துதிப்பான். வியாதிகள் வரும்போது கூடாததை மேற்கொள்ள விசுவாச நிறைந்த தலைவர்களோடு கூடி ஜெபிப்பான்.

### ஜெப குறிப்புகள்:

1. கிருபை மற்றும் விண்ணப்ப ஆவி சபையை நிரப்ப ஜெபிக்கவும்.
2. தேவன் அநேக 24/7 ஜெப கோபுரங்கள் மற்றும் குடும்ப ஜெப பீடங்கள் ஸ்தாபிக்க ஜெபிக்கவும்.
3. பயனுள்ள ஆவிக்குரிய யுத்தங்களை செய்ய அநேக பரிந்துபேசுகிறவர்களை பயிற்சிவிக்கவும், தகுதி பெறவும் மற்றும் அபிஷேக படுத்தப்படவும் ஜெபிக்கவும்.

அவர் சகலத்தையும் புதிதாக்குகிறார்

## நாள் 15

## நம்முடைய முதல் அழைப்பு அனைத்து மனிதர்களுக்கும் ஜெபிக்க வேண்டும்

(1 தீமோத்தேயு 2:1)

நம்முடைய முதல் அழைப்பு ஜெபிக்கவே. நம்முடைய முதல் ஜெபம் “எல்லா மனிதர்களுக்கும்”. புதிய நாளில் நம்முடைய முதல் செயல் ஜெபிப்பதே. இரண்டாவது செயல் ஜெபிப்பதே. மற்றும் கிறிஸ்தவர்களுடைய மூன்றாவது பொறுப்பும் ஜெபிப்பதே.

### ஜெப குறிப்புகள்:

1. ஒவ்வொரு விசுவாசிகளும் தங்களுடைய ஆசாரிய பொறுப்பை பெற்றுக்கொள்ள ஆவியானவரின் உயர்த்துதலை உணர ஜெபிக்கவும்.
2. ஒவ்வொரு விசுவாசியும் எப்படி விண்ணப்பம் செய்ய வேண்டும், ஜெபத்தில் வளர்வது என்று பரிசுத்த ஆவியானவர் தாமே போதிக்கட்டும். அப்பொழுது அவர்கள் சாதாரணமான ஜெபத்தை செய்ய மாட்டார்கள்.
3. கிறிஸ்துவின் சரீரமாக இருக்கிற நாம் வயது, இனம் மற்றும் அந்தஸ்து பார்க்காமல் எல்லா மனிதர்களுக்கு உண்மையாக ஜெபிக்க வேண்டும்.

## நாள் 16

## ஜெபத்தின் மூலம் ஒரு தேசம் மாற்றமடையும்

(நீதிமொழிகள் 21:1)

இராஜாவின் இருதயம் தேவனுடைய உள்ளங்கையில் இருக்கிறது. எங்கே மனிதன் ஜனங்களுடைய மனப்பக்குவத்தையும் சிந்தனையும் மாற்றமுடியவில்லையோ தேவனால் கூடும். முக்கியமான ஜனங்களுடைய திட்டங்களையும் செயல்களையும் தேவனால் மாற்றி அமைக்க முடியும்.

### ஜெப குறிப்புகள்:

1. ஒரு தேசத்தின் மேல் தாக்கத்தைக் கொண்டு வருகின்ற எல்லா அதிகாரிகளின் சிந்தனைகளையும் செயல்பாடுகளையும் மாற்றம் செய்வதற்கு சபை ஜெபத்தின் வல்லமையை பார்க்கும்.
2. ஒரு இடத்தில் ஏன் தேவன் நாட்டியிருக்கிறார் என்ற நோக்கத்தை ஊழியர்களும் தலைவர்களும் புரிந்துகொள்வார்கள் (ஏசாயா 61:3)
3. விசுவாசிகள் அவர்களுடைய இடத்தை எடுத்துக் கொண்டு அதிகாரத்தில் இருக்கிறவர்களுக்கு திறப்பிலே முழங்கால் இடுவார்கள்.

## நாள் 17

## தேவன் தன்னுடைய ஜனங்களை உயர்ந்த இடங்களிலே நிலைத்து வைத்திருக்கிறார்

(தானியேல் 1:3-4)

தீர்க்கதரிசி எலியா, தான்மட்டும் தான் தேவனுடைய நோக்கத்தை சேவை செய்து இருக்கிறான் என்று நினைத்தான். ஆனால் இன்னும் 7,000 கறைபடாத தீர்க்கதரிசிகள் உண்டென்று கர்த்தர் சொன்னார் (1 இராஜாக்கள் 19:18). தேசத்தை திறுப்பவும் காப்பற்றவும் தேவன் தன்னுடைய தெய்வீக போஷிப்பின் மூலமாக அவருடைய நீதிமான்களை நிலைப்படுத்தி வைத்திருக்கிறார்.

### ஜெப குறிப்புகள்:

1. கடினமான பொருளாதார சிக்கலிருந்து நம் தேசத்தை நடத்த கூர்மையான பொருளாதார துறை ஜனங்கள் வேலைக்கு சேர்க்கப்பட ஜெபிக்கவும்.
2. தேசத்திற்கு சேவை செய்ய உயர்ந்த நன்னெறிவுள்ள ஜனங்கள் கொண்டுவரப்பட்டு மற்றும் உறுதியும் வெளிதேசத்தின் முதலீடும் இத்தேசத்திற்குள் வர வேண்டும்.
3. வளர்ச்சியும் மற்றும் முதலீடு பெருக அரசாங்கம் நேர்மறையான முயற்சிகளை எடுக்க வேண்டும்.

## நாள் 18

## மாற்றம் உள்ளேயிருந்து தொடங்குகிறது

(1 தீமோத்தேயு 4:5)

தேவன் நம்முடைய வாழ்க்கையை மாற்றுகிறார் மற்றும் நம்முடைய ஜெபங்களுக்கு கிரியைகளை காண்பிப்பார். நீங்கள் தேவனுடைய வார்த்தையை கவனத்தில் வைத்தால், நீங்கள் ஜெபிக்கும் போது உங்களுடைய வார்த்தைகளை தேவன் கவனத்தில் வைப்பார்.

### ஜெப குறிப்புகள்:

1. பிதாவாகிய தேவனோடு நம் நேரத்தை செலவழித்தால், நம்முடைய இருதயங்களும் சிந்தனைகளும் நம்முடைய வாழ்க்கை தேவனுடைய நோக்கத்திற்கு நேராக திருப்பப்படும்.
2. சபை புரிந்துகொண்டு அவர்கள் சமுதாயத்தில் ஏங்குகிற தேவனுடைய மீட்பின் நோக்கத்திற்கு திருப்பப்பட வேண்டும்.
3. நம்முடைய வட்டத்திற்குள்ளாக இருக்கிற ஜனங்களையும் மற்றும் நம்முடைய சபைகள் நாட்டப்பட்ட சமுதாயத்தையும் நாம் தொடுவோம்

அவர் சகலத்தையும் புதிதாக்குகிறார்

## நாள் 19

# இறுதி காலம் பரிந்துபேசுதல்

(1பேதுரு 4:7)

முடிவு சமீபமாக இருக்கிறது. விசுவாசிகள் முழு கவனத்தோடு ஜெபிக்க வேண்டும். இசக்கார் புத்திரர்களை போல் நேரங்களையும் காலங்களையும் பகுத்தறிய வேண்டும்.

### ஜெப குறிப்புகள்:

1. நித்தியத்தை முன் வைத்து விசுவாசிகள் ஜெபித்து நாம் வாழ்கிற நேரத்தையும் காலங்களையும் அங்கீகரிக்க வேண்டும்.
2. ஊழியர்கள் அவர்களுடைய சபையின் ஜெபக் கூட்டங்களை கவனமாக நடத்த வேண்டும் ஏனென்றால் எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாக இருக்கிறது.
3. கர்த்தருடைய வருகை சமீபமாக இருக்கிறப்படினால் எல்லா விசுவாசிகளும் பரிந்துபேசுவார்கள் மற்றும் ஜெபத்தில் விழித்து இருப்பார்கள்.

## நாள் 20

# பரிந்துபேசுகிற ஊழியத்தில் தான் பரலோகமும் பூமியும் ஒன்றுகூடுகிறது

(வெளி 8:3)

உயிரோடுயிருந்து என்றென்றும் நமக்காக பரிந்துபேசுகிறவர்தான் பிரதான ஆசாரியனாகிய இயேசு. பிரதான ஆசாரியனாகிய இயேசு பரிசுத்தவான்களின் ஜெபங்களை பிதாவுக்கு முன்பதாக செலுத்துகிறார். ஆகையால் நம்முடைய ஜெபங்களுக்கு பதில் உண்டு என்று உறுதியை பெற்றுக்கொள்கிறோம். 1 யோவான் 5:14-15.

### ஜெப குறிப்புகள்:

1. ஒவ்வொரு ஜெபத்திலும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் வந்து அவர்கள் ஜெபிக்கிற வேளையில் தேவனுடைய மகிமையான பிரசன்னம் முழு சுற்றுச்சூழலை நிரப்பும் படியாக ஜெபிக்கவும்.
2. ஒவ்வொரு தடவையும் சபை ஆராதிக்க மற்றும் ஜெபிக்க கூடி வருகையில் தேவனுடைய பரிசுத்தத்தை உணர வேண்டும்.
3. தேவன் அவருடைய பிரசன்னத்தை தம் ஜனங்கள் மேல் வெளிப்படுத்தும் போது தேவ வல்லமை தேசத்தை அசைக்க வேண்டும்.



## நாள் 21

# உங்களுடைய ஜெபம் தேசத்திற்கு தேவனுடைய திட்டத்தைக் கொண்டு வரும்

(வெளி 8:5)

விசுவாசிகள் ஜெபிக்கிற வேளையில் பரலோகத்தில் இருப்பதைப்போலவே தேசத்தை குறித்த தேவனுடைய நித்திய திட்டம் பூமியில் நடைபெறும். நம்முடைய ஜெபத்தில் நாம் கவனமாக இருக்க வேண்டும் ஏனென்றால் நம்முடைய தொடர்ச்சியான ஜெபங்களை பிரதான ஆசாரியர் கேட்டுக் கொண்டு இருக்கிறார். இது தேசத்தின் மேல் தேவனுடைய நோக்கங்கள் மற்றும் திட்டங்களையும் தாக்கத்தைக் கொண்டு வரும்.

### ஜெப குறிப்புகள்:

1. தேசம் இரக்கத்தையும் நீதியும் நேசிக்க நீதிமான்கள் வெளிப்பட ஜெபிக்கவும்.
2. கல்வி திட்டங்களை உருவாக்கிறவர்களுக்கு ஜெபிக்கவும். தேசத்தின் நன்நலம், நன்நெறி ஜீவியம் ஒருவருக்கொருவரை மரியாதை செலுத்துகிற பிள்ளைகளையும் வாலிபர்களையும் உருவாக்கக்கூடிய திட்டமாக இருக்க வேண்டும்.
3. தொழிநுட்பத்திலும் வியாபரத்திலும் இந்த தேசத்தை அடுத்தக் கட்டத்திற்கு கொண்டு போக நம்முடைய பட்டதாரிகள் ஆயத்தமாகி உலகெங்கிலும் நடைபெறுகிற விரிவான வளர்ச்சிக்கு ஒத்துப்போய் ஏற்ற மறுவுத்தரவு கொடுக்க வேண்டும்.

அவர் சகலத்தையும் புதிதாக்குகிறார்

PRAYER MALAYSIA COMMISSION

Creating a Spirit empowered prayer
movement that will impact
lives and transform nations.

ASSEMBLIES OF GOD MALAYSIA

**The Assemblies of God of Malaysia**
95, Jalan Gasing, Petaling Jaya 46000,
Selangor Darul Ehsan
Website : http://www.ag.org.my
Like us on : http://www.fb.com/agpcmalaysia
Email: prayerlink@ag.org.my
Tel: 03-7956 5195 Fax: 03-7955 0471